# V. V. V. பிக்சர்ஸ் ரிலீஸ்

JR PRODUCTIONS

# பட்டினத்தார்

சங்கீதம்
G.ராமநாதன்

டைரக்ஷன்
K.சோமு

## கதைச் சுருக்கம்.

முன்னொரு காலத்தில் காவிரிப்பூம் பட்டினத்தில் திருவெண்காடர் என்ற பெரிய செல்வந்தர் தம் மனைவி சிவகலையுடனும், தாயார் ஞானகலையுடனும் வாழ்ந்து வந்தார். திருமணமாகி நீண்ட நாட்களாகியும் பிள்ளைப் பேறின்றி வருந்தி வந்தார்.

திருவிடை மருதூரில் சிவசாமர் என்ற அந்தணர் தம் மனைவி சுசீலையுடன் சிவ பூசை செய்து வந்தார். ஒரு நாள் பரமன் அவர் கனவில் தோன்றி, தீர்த்தக்கரை வில்வ மரத் தடியில், கிடக்கும் குழந்தையை எடுத்துச் சென்று திரு வெண்காடரிடம் கொடுத்து எடைக்கு எடை பொன் பெற்றுக் கொள்ளுமாறு சொல்லி மறைந்தார்.

திருவெண்காடர் அப்படிப் பெற்ற பிள்ளைக்கு மருத வாணன் என்று பெயரிட்டு வளர்த்து வந்தார். மருத வாணன் 16வயது வந்தபிறகு வாணிபம் செய்ய வெளிநாடு சென்று திரும்பும்பொழுது, விரட்டி, உமி மூட்டையுடன் ஒரு சிறு பெட்டியையும் கொண்டு வந்து தந்தையிடம் சேர்பித்து மறைகிறார். விரட்டி மூட்டையைக் கண்ட திருவெண்காடர் மனம் வருந்தி சிறு பெட்டியைத் திறந்து பார்க்க அதில் ஒரு ஓலையில் காதற்ற ஊசியும் வாராது காணுங் கடை வழிக்கே என்று எழுதியுள்ளதைக் கண் வாழ்வை வெறுத்து மனம்மாறி துறவறம் பூண்டு வீட் விட்டு வெளியேறுகிறார்.

திருவெண்காடர், தன் தாயாருக்கு அளித்த வாக்குப்படி தாயார் இறக்கும் வரை அவ்வூரிலேயே தங்கி, தாயாரின் ஈமக்கடன்களை முடித்து க்ஷேத்திராடனம் செய்து ஊர் எல்லையில் இருக்கும் பிள்ளையார் கோவிலில் தவமிருக்கிறார், அவ்வூரை ஆண்ட பத்ரகிரி மன்னனின் அரண்மனையில் ஒரு நாள் இரவு சில திருடர்கள் கொள்ளையடித்து விட்டு, பிள்ளையாருக்குக் காணிக்கையாக ஒரு முத்து மாலையை வீசி எறிந்து விட்டுப்போக அம்மாலை நிஷ்டையிலிருக்கும் பட்டினத்தாரின் கழுத்தில் விழுகிறது. மறு நாள் காலை திருடர்களைத் தேடிவரும் சிப்பாய்கள் கழுத்தில் மாலை யுடன் இருக்கும் பட்டினத்தாரை திருடனென்று நினைத்து அரசனிடம் இழுத்துப் போகிறார்கள்.

மற்றவை திரையில் காண்க.

# பட்டினத்தார் பாடல்கள்

## பாட்டு 1

பாடி : T. M. சௌந்தரராஜன் இயற் : சுந்தர வாத்தியார்

தாயும் நீ தந்தையும் நீ
சற்குருவும் நீயே
தத்துவமே சைவக்கொழுந்தே
சமரச மெய்ஞான தெய்வமே
தயாபரா மகேஸ்வரா
அருள் தரவேணும் என் இறைவனே
கலா ஞானவடிவான அமலனே — நடன
கதிதரும் மலர் பாதனே
ஜெகதீசனே உயிரெல்லாம் நிறைபவனே
தேவ தேவ எனையாளும் மாதவமே (தயா)
அன்பினல் உருகிப் பண்பாடவே நான் அந்த
அப்பரும் சுந்தரரும் நானல்லவே
கனகாபிஷேகம் செய்வோமென்றல் உனக்கு
காசாசை இல்லை அதும் நீ தந்ததே
எனதென்ற பொருளேது
எனதென்ற செயலேது
நீயல்லால் உலகம் ஏது மாதவமே (தயா)

---

## பாட்டு 2

பாடி : T. M. சௌந்தரராஜன்-லீலா இயற் : சுந்தர வாத்தியார்

ஆண் : நிலவே நீ யிந்த சேதி சொல்லாயோ
ஆலமுண்ட திரு நீலகண்டனிடம் (நில)

பெண் : நிலவே நீயிந்த சேதி சொல்லாயோ
நீலவண்ணன் திருமாலின் தங்கையிடம் (நில)

ஆண் : கோடிச் செல்வம் நிறைந்தாலும் என்ன அதை
குலவிக் கொஞ்ச மனம் குளிர்ந்திடுமோ
ஓடிவந்து விளையாட இங்கு ஒரு
பாலன் வேண்டுமென வேலன் தந்தையிடம் (நில)

பெண் : சிலைகள் போல இரு சேய்களை யீன்று
சிந்தை குளிரவில்லையோ உமையவள் அதுபோல்
உலகில் எந்தனது உள்ளம் கனிய ஒரு
பிள்ளை வேண்டுமென மெல்ல அம்மையிடம் (நில)

ஆண் : பக்தியைக் கெடுத்திடும் பாதகரை வெறுத்து
சினந்திருக்கும் போதிதை சொல்லாமல்
சக்தியாகும் உமாதேவியுடன் தமது
புத்திரர்களை வாரி முத்தமிடும் போது (நிலவே)

பெண் : மகவில்லாத இவள் மலடி என்றுலகம்
வசைகள் பேசியெனை இகழ்ந்திடுமே என்
வகையில் இந்த பராமுகமேனோ
மர்மம் ஒன்றும் அறியேன் அன்னையிடம் (நிலவே)

---

## பாட்டு 3

பாடி : சூலமங்கலம் ராஜலக்ஷ்மி — இயற் : கு. மா பாலசுப்ரமண்யம்

தங்கப் பொம்மை போலென்னைத்தாவும் இன்பமே
சங்கத் தமிழ்ச் செல்வமே வாழிய வாழிய நீடூழி (தங்)
ஆவலினாலே ஏங்கும் நெஞ்சிலே
அமைதி சேர்க்க வந்த ஆரமுதே
தாவி என் மார்பில் தவழாயோ
தாமரையே செல்வ மாமணியே (தங்)

மைந்தனில்லாமல் வாழ்ந்த மனையில்
மழலை பேச வந்த பூங்கிளியே
தந்தையின் வாணிபம் பயில்வாயோ
ஆணிப்பொன்னே பச்சை மாணிக்கமே (தங்)

---

## பாட்டு 4

பாடி : சுசீலா — இயற் : தஞ்சை ராமையாதாஸ்

வக்கணை பேசுவதில் கெட்டிகாரு — எந்தன்
வாழ்வை மலர வைத்த வட்டிக்காரு — வந்து
மசிய வைத்து ஆசை மந்திரத்தை உச்சரித்து
மயக்கிடும் ஜவ்வாது பொட்டுக்காரு (வக்கணை)

சாரீர வளமையில் சரீர இளமையில்
சங்கீத இனிமையில் நிகர் யாரு உமக்கு நிகர்யாரு — நல்ல
தத்துவக்கலைகளிலே வித்துவம் அடைந்த ஒரு
தனிக் கவிவாணனென்று புகழ்வாரு (வக்கணை)
எத்தனை மயில்கள் வந்து ஆடினாலும் அமைதி

எண்ணங்கொண்டு இன்பக் குயில் பாடினுலும்
அத்தனைக்கும் என்போல அந்தம் வருமா மயக்கும் உங்கள்
அன்பைக் கவரும் மன இன்பம் தரும எதிலும் (வக்கணை)

---

## பாட்டு 5

பாடி : ஸௌந்தரராஜன் இயற் : சுந்தர வாத்தியார்

காப்பதுன் பாரமையா — ஐயா
புயல் காற்றுவேகம் சீற்றமானதாலே
கப்பல் ஏதும் பிழைநேராமல் (காப்)
அறியாதவன் எனை ஆளும் உந்தன் அருள் வடிவானவன்
அகலாத எந்தன் உயிர்க்குயிரானவன் அவனை (காப்)
கடலோடித் தானுகவ்வே பெரும்
பொருள் தேட ஆசை கொண்டான்
ஏங்கள் குலநீதி அதுவாகிலும்
பேதை மனம் தாள வலுவில்லையே — இது
நேரம் சூழ்நிலையும் பயமானதால் அவனை (காப்)

---

## பாட்டு 6

பாடி : T. M. ஸௌந்தரராஜன் இயற் : அ. மருதகாசி

கண்ணிருந்தும் குருடாய் இருந்து விட்டேன் நான்
காலமெல்லாம் வீணே கழித்து விட்டேன்
பொன் பொருள் சதமென்று பூமியிலே அலைந்து
பொய்யை மெய்யென்று நம்பி விட்டேன்
உன் மலர்ப் பாதாரம் மறந்து விட்டேன் ஐயா
உண்மையை இன்றுதான் உணர்ந்து கொண்டேன்
சொந்தம் பந்தமென்றும் துன்பம் இன்பமென்றும்
மந்த மதியாலே மதித்திருந்தேன்
வந்தது தெரிந்தாலும் வருவது தெரியாது
என்பதை இன்றுதான் புரிந்து கொண்டேன்

---

## பாட்டு 7

பாடி : T. M. ஸௌந்தரராஜன் இயற் : சுந்தர வாத்தியார்

பக்தி கொண்டாடுவோம் — தெய்வ
பக்தி கொண்டாடுவோம்
பவ சாகரத்திலே கிடந்து
தவியா விதத்திலே தொடர்ந்து (பக்தி)

பரிவுகொண்டு புகழ் துதி புரிந்து எதிர்
தலைவணங்கி உளம் உருகி நின்று — (பக்தி)
நிகழும் லோக வாழ்வதை சதம் என
அனுதினமும் மாய மாதர் மோக வலையினில்
சுழலும் —
காம குரோத லோப மதமதில் உழலும்
பாவியாகி வாழ்வில் இடர்பட
அகமும் வாடி நோய்களாலே மெலியவும்
அமுதம் வாயில் ஏகிடாமல் ஒழுகிட
வகையிலாது சேய்களோடு மனைவியும்
கதறி வீழ நாடி பேத கணமதில்
நமனும் வந்துயிரை கவரவும் பிணமாய்
சுடலை அண்டி நமதுடலும்
வெந்தழியும் நாளிலே
நம்நாடு எங்கே
பெரும் வீடு எங்கே
காப்பு நஞ்சை எங்கே
தோப்பு புஞ்சை எங்கே
அதிகாரம் எங்கே
வியாபாரம் எங்கே
மனைவி மக்கள் எங்கே
வைத்த ரொக்கம் எங்கே
வாங்கின வட்டி எங்கே
இரும்புப் பெட்டி எங்கே
அவையெல்லாம் கூடவருமோ அங்கே
நாடி வருவதெது பாவ புண்ணியமல்லாது
நாம் அறையில் அணியும் கோவணமும் வராது
நன்குணர்ந்து கொண்டு சிந்தையும்
தெளிந்து கும்பிடுங்கள் - என்றும்
தவநிலை நாட்டும் அருள் அமுதூட்டும்
பதவி காட்டும்
(பக்தி)

---

## பாட்டு 8

பாடி : T. M. சௌந்தரராஜன் இயற் : பட்டினத்தார் பாடல்

ஒன்றென்றிரு தெய்வம்
உண்டென்றிரு — (ஒன்)
செல்வமெல்லாம் அன்றென்றிரு உயர் (ஒன்)
பசித்தோர் முகம்பார்
நல்லறமும் நட்பும்
நன்றென்றிரு
நடுநீங்காமலே நமக்கு இட்டபடி
என்றென்றிரு
மனமே உனக்குபதேசமிதே.
நாட்ட மென்றே இரு
சற்குரு பாதத்தை நம்பு
பொம்மலாட்ட மென்றே இரு
பொல்லா உடலை
அடர்ந்த சந்தை கூட்டமென்றே இரு
சுற்றத்தை
வாழ்வை குடங்கவிழ் நீர்
ஓட்டமென்றே இரு
நெஞ்சே உனக்குபதேசமிதே (ஒன்)

---

## பாட்டு 9

பாடி : T. M. சௌந்தரராஜன் இயற் : பட்டினத்தார் பாடல்

ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்து பெற்று
பையலென்றபோதே பரிந்தெடுத்து
செய்ய இரு கைப்புறத்தில் ஏந்தி கனகமுலை தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி
வட்டிலிலும் தொட்டிலிலும்
மார் மேலும் தோள் மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து
முட்டச் சிறகிலிட்டுக் காப்பாற்றி
சீராட்டும் தாய் தனக்கோ
விறகிலிட்டு தீ மூட்டுவேன்.
அரிசியோ நானிடுவேன் ஆத்தாள் தனக்கே
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல் அம்மா! அம்மா!

ருசியுள்ள தேனே அமிர்தமே
செல்வத்திரவிய பூமானே
என அழைத்த வாய்க்கு அம்மா !
முன்னையிட்ட தீ முப்புறத்திலே
பின்னையிட்ட தீ தென்னிலங்கையிலே
அன்னையிட்ட தீ அடிவயிற்றிலே
யானுமிட்ட தீ மூள்க மூள்கவே
வேகுதே தீயதனில் வெந்து பொடி சாம்பலாகுதே
பாவியேன் ஐயகோ மாகக் குருவி பரவாமல்
கோதாட்டி என்னை கருதி வளர்த்தெடுத்த கை.

---

## பாட்டு 10

பாடி : T. M சௌந்தரராஜன் இயற் : பட்டினத்தார் பாடல்

ஒருமட மாதும் ஒருவனுமாகி
இன்ப சுகம் தரும் அன்பு பொருந்தி
உணர்வு கலங்கி ஒழுகிய விந்து
ஊறு சுரோணித மீது கலந்து
பனியிலோர் பாதி சிறு துளி மாது
பண்டியில் வந்து புகுந்து திரண்டு
பதும அரும்பு கமடம் இதென்று பார்வை
மெய் வாய் செவி கால் கைகள் என்ற
உருவமும் ஆகி உயிர் வளர் மாதம்
ஒன்பதும் ஒன்றும் நிறைந்து மடைந்தை
உதரம் அகன்று புவியில் விழுந்து
யோகமும் வாரமும் நாளும் அறிந்து
ஒளிநகை ஊறல் இதழ்மட வாரும்
உவந்து முகந்திட வந்து தவழ்ந்து
மடியில் இருந்து மழலை மொழிந்து
வாயிரு போவென நாமம் விளம்ப
உடை மணி ஆடை அரைவடம் ஆட
உண்பவர் தின்பவர் தங்களொடுண்டு
தெருவில் இருந்து புழுதி அளைந்து
தேடிய பாலரோடோடி நடந்து
அஞ்சு வயதாகி விளையாடியே
உயர்தரு ஞான குரு உபதேசம்

முத்தமிழின் கலையும் கரை கண்டு
வளர்பிறை என்று பலரும் விளம்ப
வாழ்பதினாறு பிராயமும் வந்து
மதன சொரூபன் இவனென மோக
மங்கையர் கண்டு மருண்டு திரண்டு
வரிவிழி கொண்டு சுழிய அரிந்து
மாமயில் போல் அவள் போவது கண்டு
மனது பொறாமல் அவள் பிறகோடி
தேடிய மாமுதல் சேர வழங்கி
வளமையும் மாறி இளமையும் மாறி
வன்பல் விழுந்திரு கண்கள் இருண்டு
வயது முதிர்ந்து நரை திரை வந்து
வாத விரோத குரோத மடைந்து
செங்கையில் ஓர் தடியுமாகியே
வருவது போவது ஒருமுது கூனும்
மந்தி எனும்படி குந்தி நடந்து
மதியும் அழிந்து செவிதிமிர் வந்து
வாயறியாமல் விடாமல் மொழிந்து
கல கல என்று மலஜலம் வந்து
கால்வழி மேல்வழி சார நடந்து
கடன்முறை பேசும் என உரை நாவும்
உறங்கி விழுந்து கைகொண்டு மொழிந்து
கடை வழி கஞ்சி ஒழுகிட வந்து
பூதமும் நாலு சுவாசமும் நின்று
நெஞ்சு தடுமாறிவரும் நேரமே
வலைபிறைபோலே எயிறும் உரோமமும்
சடையும் சிறு குஞ்சியும் விஞ்ச
மனதும் இருண்ட வடிவும் இலங்கை
மாமலை போல் யமதூதர்கள் வந்து
வலைகொடு வீசி உயிர் கொடு போக
மைந்தரும் வந்து குனிந்தழ நொந்து
மடியில் விழுந்து மனைவி புலம்ப
மாள்கினரே இவர் கால மறிந்து
வரிசை கெடாமல் எடுமென ஓடி
வந்திள மைந்தர் குனிந்து சுமந்து
கடுகி நடந்து சுடலை அடைந்து

மானிட வாழ்வென வாழ்வென நொந்து
விறகிட மூடி அழல் கொடு போட
வெந்து விழுந்து முறிந்து நிணங்கள்
உருகி எலும்பு கருகி அடங்கி
ஓர் பிடி நீறும் இலாத உடம்பை
நம்பும் அடியேனை இனியாளுமே

---

## பாட்டு 11

பாடி : T. M. சௌந்தரராஜன் இயற் : பட்டினத்தார் பா

என் செயலாவதி யாதொன்றுமில்லை
இனித்தெய்வமே
உன் செயலே என்றுணரப் பெற்றேன்
இந்த ஊனெடுத்த
பின் செய்த தீவினை யாதொன்று —
மில்லைப் பிறப்பதற்கு
முன் செய்த தீவினையோ இங்ஙனே
வந்து மூண்டதுவே

---

## பாட்டு 12

பாடி : திருச்சி லோகநாதன் இயற் : சுந்தர வாத்தி

திருவெண்காடா தீயவன் செய்த
பிழைகளைப் பொறுப்பாயா — ஐயா
அடித்த கையினாலே — உன்னை
ஒருபிடி அன்னம் எடுக்கவும் முடியலைடா
துடுக்குடன் உன்னைப் பேசிய வாயோ
சுணைகெட்டுப் போனதடா—ஐயா (தி
ஏழைகள் வயிறு எரிந்திட வாங்கின
வட்டியை நினைப்பேனா—அதை
வேசிகள் காலிலே கொட்டியே வாங்கின
வேதனை சகிப்பேனா ஐயா (தி
ஊசியைக் கொண்டே உலகம் தெரிந்தாய் நீ
உண்மையில் ஞானியடா நீ

உன் கால்தூசி படும்படி உதைத் தென் பாபத்தை
துடைத்திட வேணுமடா—ஐயா (திரு)

அகந்தையினுலே அழிந்தவனென்றே
அருவருந்திடுவாயா—ஐயா (திரு)

---

## பாட்டு 13

பாடி : T. M. சௌந்தரராஜன் இயற் : சுந்தர வாத்தியா

முறையோ நீதியோ இறைவா இதாமோ
முற்றும் சொல்லவோ பக்தன் அல்லவேர்

ஐயா மெய்யாய் இதுவும் — (முறையோ)
காணவேணும் என்றே காத்திருந்தேனே

கனியாத புது ஞானிமேல் கண் குளிர்ததோ—ஈசா
என குறையதோ பண்பில்லாததோ

எந்தாய் அன்பே அந்தோ இதுவும் — (முறையோ)
காதற்ற ஊசியும் வ்ாராதுகாண்—என்றே

கருத்தோடு பொருள் தந்தணை பொய்யாகுமோ-ஈசா
அமுதானவா உமை நாயகா

எந்தாய் அன்பே அந்தோ இதுவும்— (முறையோ)

---

## பாட்டு 14

பாடி : T. M. சௌந்தரராஜன் இயற் : பட்டினத்தார் பாடல்

...ளால் மகவறிந்து ஊட்ட வல்லேனல்லன்-மாது சொன்ன
...ளாலிளமை துறக்க வல்லேனல்லன்—தொண்டு செய்து
...ளாறிற் கண்ணிதடந்தப் பவல்லேல்லன்-நானினிச் சென்
...ளாவ தெப்படியோ-திருக்காளத்தியப்—பருக்கே.

---

ராஜா பிரிண்டர்ஸ், திருச்சிராப்பள்ளி—2.

# பட்டினத்தார்

நடிகர்கள் :

பிரபல பின்னணி பாடகர்

| | |
|---|---|
| T. M. சௌந்தரராஜன் | ... திருவெண்க |
| நடிகவேள் M. R. ராதா | .... ஈசன் செட்டி |
| செருகளத்தூர் சாமா | .... சிவசர்மர் |
| S ராம ராவ் | ... கணக்குப் பி |
| சட்டாம்பிள்ளை | |
| வெங்கட்ராமன் | ... ஈசன்செட்டிய |
| நடராஜன் | ... பத்ருகிரியார் |

ம் கிருஷ்ணமூர்த்தி C. V. V. பந்
செங்கோட்டை கங்காதரன், G. முத

நடிகைகள் :

| | |
|---|---|
| ஜெமினி சந்திரா | ... சிவகலை |
| S. D. சுப்புலக்ஷ்மி | .... மீனாட்சி |
| S. R. ஜானகி | .... ஞானக்கலை |

B. லீலாவதி, கலாவதி, S. ருக்மணி,
P. A. புஷ்பமாலா, ரமா மற்றும் பலர்

பாடல்கள் :

T. K. சுந்தர வாத்தியார், தஞ்சை ராமைய
கு. மா. பாலசுப்ரமணியம், அ. மருதகா
பட்டினத்தார் பாடல்கள்

பின்னணி பாடியவர்கள் :

திருச்சி லோகநாதன், பி. சுசீலா, பி. லீ
சூலமங்கலம் ராஜலக்ஷ்மி

கதை வசனம் :

தஞ்சை ராமையா தாஸ் & அகிலன்

சங்கீதம் :

ஜி. ராமநாதன்

ஒலிப் பதிவு :
ஆர். சிட்டிபாபு

டைரக்ஷன்
கே.

ஸ்டுடியோ :

ம் சென்டர் ஸ்டுடியோ, சென்னை.